# மழை வெள்ளம் பாய்தல் மீது புதிய கட்டண விதிப்பு

2020, ஜூன் 1 ஆம் தேதி முதல், மழைவெள்ளம் பாய்தல் மீது ப்ராம்ப்ட்டன் நகரம் கட்டணம் விதிக்கின்ற முறை அமலுக்கு வருகிறது; வீடுகள் மற்றும் கட்டிடங்களின் உரிமையாளர்கள் தங்கள் தண்ணீர்க் கட்டண விலைப்பட்டியலில் தங்களுக்கான முதலாவது மழை வெள்ளம் பாய்தல் மீதான கட்டணம் முதன் முறையாக விதிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்

## மழைவெள்ளம் பாய்தல் என்றால் என்ன?

ரூனோ என்றும் அழைக்கப்படுகின்ற மழைவெள்ளம் என்பது மழையின் காரணமாக மற்றும் கட்டிடங்களின் மீதிருந்து பனி உருகி நீராக வடிவதன் காரணமாக நமது தெருக்களில் வழிந்தோடி, மழைவெள்ளம் வடிவதற்கென அமைத்துள்ள கட்டமைப்பிற்குள் சென்றுவிடுகின்ற நீராகும்; இந்தக் கட்டமைப்பில் 14000 கிலோமீட்டர் நீளம் கொண்ட வடிகால் குழாய்களும் மற்றும் 180 மழைநீர் குளங்களும் அடங்குகின்றன.

## இந்தக் கட்டணத்தை நான் ஏன் செலுத்த வேண்டும்?

ப்ராம்ப்ட்டன் நகரில் $1 பில்லியனுக்கும் கூடுதலான மதிப்பு கொண்ட, மழைவெள்ளத்தை சமாளிக்கின்ற கட்டுமான அமைப்பு இருக்கிறது. இதனைப் பராமரிப்பதற்காக ஆண்டொன்றுக்கு $23 மில்லியன் செலவாகிறது. மழைவெள்ளம் பாய்தலின் மீதான கட்டணம் செலுத்துவது என்பது, இந்தப் பராமரிப்புச் செலவுகளை ஈடுகட்டுவதற்காக, விதிக்கப்படும் இந்தக் கட்டணம், இதற்கென எப்போதும் கிடைக்கும் வகையில் ஒதுக்கப்பட்ட நிதி ஆதாரம் கொண்டிருப்பதை உறுதி செய்யும்; இதன் மூலம் பொதுமக்களின் பாதுகாப்பு, தெருக்களில் வெள்ளம் மற்றும் அதனால் ஏற்படும் அரிப்பு ஆகியவை குறைவதுடன் கட்டிடங்கள் மற்றும் சுற்றுச்சூழலும் காக்கப்படுகிறது.

## கட்டணமாக நான் எவ்வளவு செலுத்த வேண்டும்?

பெரும்பாலான கட்டிடங்களுக்கு, அவற்றின் மீதான தண்ணீர்க் கட்டண செலவுப்பட்டியலுடன் சேர்த்து, வருடாந்திர மழை வெள்ளம் பாய்தல் மீதான கட்டணமாக நான்கு தவணைகளாக குறிப்பிடப்படும். இந்தக் கட்டணமானது உங்கள் கட்டிடத்தில் இருந்து எத்தனை கொள்ளளவு மழைநீர் வெளியில் பாய்கிறது என்பதன் அடிப்படையிலானது. உங்கள் கட்டிடத்தில் கட்டுமானப் பரப்பு அதிகமிருப்பின் மழை வெள்ளம் பாய்தல் கட்டணமும் அதிகமாக விதிக்கப்படும்.

## தனி ஒரு குடும்பம் வசிக்கின்ற குடியிருப்புக் கட்டிடங்கள்

சொத்தின் வகையைப் பொருத்து ஒரு குறிப்பிட்ட கட்டண விகிதம்.

| குடியிருப்புக் கட்டிடத்தின் வகை | கூரையின் பரப்பளவு (சதுர மீ) | குறிப்பிட்ட கட்டண விகிதம் (ஆண்டு ஒன்றுக்கு) |
|---|---|---|
| மிகச்சிறியது | 23,4 - 105 | $ 44,50 |
| சிறியது | 106 - 140 | $ 62,30 |
| நடுத்தரம் | 141 - 220 | $ 89,00 |
| பெரியது | 221 - 250 | $ 115,70 |
| மிகப்பெரியது | 250 க்கும் அதிகமாக | $ 160,20 |

## குடியிருப்பு அல்லாத மற்றும் பல குடும்பத்தினர் வசிக்கும் கட்டிடம்

ஒவ்வொரு கட்டிடத்திலும் இருக்கின்ற கட்டுமானப் பரப்பளவில், சதுர மீட்டர் ஒன்றுக்கு எனும் விகிதத்தில் கட்டண விகிதம்.

| பல குடும்பத்தினர் வசிக்குமிடம்/ வசிப்பிடமல்லாத கட்டிட வகை | அலகு விகிதம் (ஆண்டு ஒன்றுக்கு) |
|---|---|
| சதுர மீட்டர் ஒன்றுக்கு | $0.38 |

உங்கள் குடியிருப்பு முகவரியை வைத்து உங்களுக்கான மழைவெள்ளம் பாய்தலுக்கான கட்டணம் எப்படி கணக்கிடப்பட்டுள்ளது என ஆன்லைனில் நீங்கள் சரிபார்த்துக்கொள்ளலாம்.

## எனக்கான கட்டணம் சரியாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை என்றால் என்ன செய்வது?

உங்களுக்கான கட்டணம் சரியாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை, அல்லது பிழையாக இருக்கிறது என்றால், சரி செய்வதற்கான ஒரு வேண்டுகோளை நீங்கள் பதிவு செய்யலாம்.

## தள்ளுபடிகள் கிடைக்குமா?

சில வகை கட்டிடங்கள் மானியம் பெறத் தகுதி பெறும், அல்லது கட்டணத்தில் சிறிது குறைக்கப்படும்

## எனக்கான விலைப்பட்டியலில் என்னவெல்லாம் இருக்கும்?

ரீஜன் ஆஃப் பீல் அமைப்பு அளிக்கின்ற கட்டணப் பட்டியலில் பின்வருபவை இருக்கும்:

- ப்ராம்ப்டன் நகரின் மழைவெள்ளம் பாய்தலுக்கான கட்டணம்
- தினசரி விதிக்கப்பட்டும் விகிதம்
- விலைப்பட்டியலில் சேர்க்கப்படும் நாட்களின் எண்ணிக்கை
- மழைவெள்ளம் பாய்தல் மீது கொடுக்கப்படும் கட்டணக் குறைப்புக்கள், ஏதேனும்
- மழைவெள்ளம் பாய்தலுக்கான கட்டணத்தின் மொத்த தொகை

மழைவெள்ளம் பாய்தலுக்கான கட்டணம் பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகை புரியவும்:

**www.brampton.ca/stormwater**

311

BRAMPTON

30270-I-0079

20-0556